**Sub Court, Eraniel**

**O.S. No.130/2022**
Date: 21.10.2024.
வா.சா.1 - திருமதி. லைலா.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.
2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என்றால், சரிதான். எனது தகப்பனாரின் வயது 93 ஆகும். அவர் உயிருடன் இருக்கிறார். வழக்குப் பட்டிகைச் சொத்தை தவிர்த்து அவருக்கு வேறு சொத்துக்களும் உண்டு என்றால், சரியல்ல. எனது அப்பா வழி தாத்தாவான வேலாயுதன் பிள்ளைக்கு அவரது தகப்பனார் ஐயப்பன் பிள்ளை 1116 மலையாள வருடத்தில், வேலாயுதன் பிள்ளைக்கு பாகப்பத்திரம் எண். 1142 /1116 எழுதிக் கொடுத்திருந்தார் என்றால், சரிதான். அந்த பாகப்பத்திரப்படி எனது தாத்தாவிற்கு அதிலுள்ள பி பட்டிகைச் சொத்து பாகம் ஒதுக்கப்பட்டிருந்தது என்றால், சரிதான். எனது தாத்தா உயிருடன் இருக்கும் போது அந்த சொத்துக்களை அவர் தான் கைவசம் வைத்து அனுபவித்து வந்தார் என்றால், சரிதான். எனது தாத்தாவிற்கு 2 பெண்பிள்ளைகள் மற்றும் 2 ஆண் பிள்ளைகள். எனது தாத்தா வேலாயுதன் பிள்ளை, எனது அப்பா ஐயப்பன்பிள்ளைக்கும், எனது சித்தப்பா பகவதி பிள்ளைக்கும் ஒரு உயில் எழுதி வைத்திருந்தார் என்றால், சரிதான். அந்த பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எண்.68/1994 என்றால், சரிதான். அந்த உயில் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களைப் பொறுத்து எனது தகப்பனார், அதனை தனியாக எடுத்து அனுபவித்து வந்தார் என்றால், சரிதான். அந்த உயில் ஆவணத்தில், இந்த வழக்குப் பட்டிகைச் சொத்து ஏ செடியூலாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதே போல் எனது சித்தப்பா பகவதி பிள்ளைக்கு கொடுக்கப்பட்ட பி செடியூல் சொத்தினை அவரும் அவரது குடும்பத்தினரும் தனியாக எடுத்து அனுபவதித்து வருகிறார்கள் என்றால், சரிதான். நான் திருமணமாகி வசித்து வரும் எனது கணவர் வீடும், எனது தகப்பனாரின் வீட்டிற்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். இந்த வழக்குப் பட்டிகைச் சொத்தில் எங்களது குடும்ப வீடு உள்ளது என்றால், சரிதான். 93 வயதான எனது தகப்பனார், என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரிதான். அவர் 2வது பிரதியான எனது தங்கையான சுஜாவுடன் வசித்து வருகிறார். வழக்குப் பட்டிகைச் சொத்தின் பின் பகுதியில் உள்ள தென்னை மரங்களில் இருந்து பலன் எடுத்து நான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரியல்ல. வழக்குப் பட்டிகைச் சொத்து எனது தகப்பனாருக்கு உயில் ஆவணம் மூலம் கிடைத்ததால் அந்தச்

சொத்து தனிப்பட்ட சொத்தாகத் தான் கருத முடியுமே தவிர கூட்டுக் குடும்பச் சொத்தாக கருத முடியாது என்றால், சரியல்ல. எனது தகப்பனாருக்கு உரிமைப்பட்ட சொத்து என்பதால், அவர் தனது வாழ்நாளில் யாருக்கு வேண்டுமானாலும் எழுதி வைக்க அவருக்கு உரிமை இருக்கிறது என்றால், சாட்சி பதில் ஏதும் கூறவில்லை. எனது தாத்தா சொத்து என்று நான் சொல்வதால் நான் எனது சித்தப்பாவிற்கு கிடைத்த சொத்தில் பங்கு ஏதும் கேட்கவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.2 ஐ பற்றி எனக்கு அது எழுதப்பட்ட ஒரு வருட காலத்திற்குள்ளாகவே தெரியும் என்றால், சரியல்ல. எனக்கு ஏற்கனவே எனது தகப்பனார் 2ம் பிரதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த விபரம் எனக்குத் தெரியும் என்றாலும் நான் அவ்வாறு தெரிந்த கொண்டு தான் பட்டிகை சொத்தன் பின் பக்கத்தில் இருக்கும் தென்னை மரங்களின் பலன்களை நான் அனுபவித்து வருகிறேன் என்றால், சரியல்ல. அவ்வாறு மரங்களே கிடையாது. எனது தகப்பனார் உயிரோடு இருக்கும் காலத்தில், அவருக்கு உரிமைப்பட்ட சொத்தில் நான் 1/3 பாகம் உரிமை ஏதும் கோர முடியாது என்றால், எனது தகப்பனாருக்கு சுயபுத்தி கிடையாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.